

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 ஏப்ரல் 25, 2019 புரட்சி 18 முழக்கம் 15 விலை: ரூ.3.00


# இலங்கையின் தொடர் குண்டு வெடிப்புகள்

# கடவுளின் ஆட்சிக்கு மனித உயிர்களை பலி கேட்கும் மதவெறி

இலங்கையில் கிறித்துவர்களைக் குறி வைத்து அவர்களின் வழிபாட்டு இடங்களிலும் நட்சத்திர ஓட்டல்களிலும் குண்டு வெடித்து 310க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் பலியாகிவிட்டனர். 500 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர். மட்டக் களப்பில் ஈஸ்டர் நாள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த தமிழர்களும் குண்டு வெடிப்புக்கு பலியாகியுள்ளனர். இந்தியாவைச் சார்ந்த 5 பேர் உயிர்ப் பலியாகியுள்ளனர்.

சிறுபான்மை மக்களைக் குறி வைத்து நடத்தப்பட்ட இந்தக் கொடூரத் தாக்குதல் கடும் அதிர்வுகளை உருவாக்கியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை என்றாலும் தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பு மீது இலங்கை அரசு சந்தேகம் தெரிவித்திருக்கிறது. ஆனாலும் தாக்குதலுக்கு குறி வைக்கப் பட்டவர்கள் - மதத்தின் அடிப்படையில் தான் என்பது மட்டும் உறுதியாகியிருக்கிறது. உலகம் முழுதும் மத பயங்கரவாதம் மனித குலத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. ஈரான், சிரியா, ஆப்கானிஸ்தான் என்று இந்த பட்டியல் விரிவடைந்து நிற்கிறது.

தங்களின் ‘கடவுள்’ ஆணையை ஏற்று ‘மத அரசாட்சியை’ உருவாக்குவதற்காக மனித உயிர்களைக் காவு கேட்டுக் கொண்டிருக்கிறது மத வெறி.

இந்தியாவில் ஜனநாயக அமைப்பு வழியாக அதிகாரத்தைப் பிடித்து இங்கேயும் ஒரு மத ஆட்சியை நிறுவும் முயற்சிகளை மதவாத சக்திகள் திட்டமிட்டு அரங்கேற்றி வருகின்றன.

தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கவுரி லங்கேஷ் போன்ற பகுத்தறிவாளர்கள் இந்து ராஜ்யம் அமைக்கத் துடிக்கும் ‘சனாதன சன்ஸ்தா’ என்ற மதவெறி அமைப்பைச் சார்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த அமைப்பை மோடி ஆட்சி தடை செய்யக் கூட தயாராக இல்லை.

பல குண்டுவெடிப்புகளை நடத்தி பயங்கரவாத செயலில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் வெளி வந்துள்ள பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் இந்து தீவிரவாதி, இப்போது பா.ஜ.க.வின் சார்பில் போபால் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். மாலேகான் குண்டுவெடிப்பு, சம்ஜவுத்தா எக்ஸ்பிரஸ் தொடர் வண்டியில் குண்டு வெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு என்று தொடர் குண்டு வெடிப்புகள் 2006, 2007, 2008ஆம் ஆண்டுகளில் நடந்தன. இந்த குண்டு வெடிப்பில் பலர் கொல்லப்பட்டனர். ‘அபிநவ் பாரத்’ என்ற மதவெறி அமைப்பு இந்தத் தொடர்குண்டு வெடிப்புகளை நடத்தியதை தேசிய புலனாய்வுத் துறை கண்டுபிடித்தது. இதில் மூளையாகச் செயல்பட்டவர்களில் ஒருவரான பெண் சாமியார் பிரக்யா சிங் தாக்கூர் என்பவர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வழக்கு விசாரணை இன்னும் முடியவில்லை. பல ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு உடல்நலனைக் காரணம் காட்டி பிணையில் வெளி வந்துள்ளார். பா.ஜ.க. என்ற அரசியல் கட்சியோடு தொடர்பில்லாத ஒரு பயங்கரவாதக் குழு உறுப்பினரான இவரை இப்போது பா.ஜ.க. தனது கட்சி உறுப்பினராக அங்கீகரித்து ம.பி. மாநிலம் போபாலில் பா.ஜ.க. வேட்பாளராக காங்கிரஸ் வேட்பாளர் திக் விஜய் சிங்கிற்கு எதிராக களமிறக்கியுள்ளது. பயங்கரவாத செயலில் ஈடுபட்ட ஒருவரை பா.ஜ.க. வேட்பாள ராக்கியதற்கு கடும் எதிர்ப்புகள் வந்தாலும் பா.ஜ.க. அது குறித்து கவலைப்படவில்லை.

கர்கரே என்ற நேர்மையான போலீஸ் அதிகாரி மும்பை தாக்குதலின் போது கொல்லப்பட்டதை நியாயப்படுத்திப் பேசியிருக்கிறார் இந்த பெண் சாமியார்; தான் விட்ட ‘சாபம்’ தான் அவர் உயிரைப் பறித்தது என்று பேசியுள்ளார். தேர்தல் ஆணையம் எதிர்ப்பு தெரிவித்தவுடன் வருத்தம் தெரிவித்தார். இப்போது பாபர் மசூதியை அதன் உச்சியில் நின்று உடைத்தவர்களில் நானும் ஒருவள் என்று பெருமையோடு பேசியிருக்கிறார்.

இராமர் கோயிலைக் காட்டி இந்தியாவில் இராமஇராஜயத்தை உருவாக்கப் போவதாகக் கூறும் பா.ஜ.க. ஆட்சி கோட்சே உயிருடன் இருந்திருந்தால் அவரை பிரதமர் வேட்பாளராகவே அறிவித்திருக்கும். இப்போதும் ‘கோட்சே’யின் புகழ்பாடுகின்றன ‘சங் பரிவாரங்கள்’.

அல்லாவின் பெயரால் உலகம் முழுதும் நடக்கும் இஸ்லாமிய பயங்கரவாதமானாலும் இந்துத்துவ பயங்கரவாதமானாலும் எல்லாவற்றுக்கும் அடிப்படை மதம் கட்டமைக்கும் வெறி தான். சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டிய மதங்கள் மக்களைப் பிளவு படுத்தி வன்முறை வெறியாட்டங்களைத் தங்கள் கடவுளின் பெயரால் நடத்திக் கொண்டிருக்கின்றன. ‘கடவுள் இராஜ்யத்துக்கு’ மனித உயிர்களைப் பலி கேட்கும் மதவெறியை ஒரு நாகரிக சமூகம் எப்படி ஏற்க முடியும்?

**(மதம் பற்றி பெரியார் சிந்தனை – உள்ளே 2ஆம் பக்கம்)**

## நன்கொடை திரட்டும் இயக்கத்தைத் தொடங்கி விட்டீர்களா?



கழகத் தோழர்களே!

தலைமைக் கழகத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் கட்டமைப்பு நிதி திரட்டும் களப் பணியை தொடங்கி விட்டீர்களா?

அதற்கான துண்டறிக்கை – நன்கொடை ரசீதுகள் – தோழர் களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன. கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களைச் சந்திக்க வருகிறார்கள்.

தோழர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நிர்ணயிக்கப் பட்டுள்ள இந்த ரூ.20,000/- நன்கொடை திரட்டும் இயக்கத்தில் தோழர்கள் ஆர்வம் காட்டி வருவது நமக்கு நல்ல நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அறிவித்த சில நாட்களிலே சில தோழர்கள் ரூ.20,000/- நன்கொடையை வழங்கியிருப்பதையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

1. மதுரை முருகேசன் வாசுகி – ரூ.20,000/-
2. விடுதலை இராசேந்திரன் – ரூ.20,000/-
3. சென்னை அண்ணாமலை (எம்.ஜி.ஆர். நகர்)–ரூ.20,000/-

(பட்டியல் பெருகட்டும்)

## தலித் மக்கள் வீடுகளை சூறையாடிய பா.ம.க. வன்முறைக்கு கழகம் கண்டனம்

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் போட்டியிடும் தொகுதியில் பா.ம.க.வினர் திட்டமிட்ட கலவரத்தில் இறங்கி தலித் மக்களின் வீடுகளைத் தாக்கியுள்ளது வன்மையான கண்டனத்துக்கு உரியது. தொல் திருமாவளவன் சின்னம் பானை என்பதால் பானைகளை வீதிகளில் போட்டு பா.ம.க.வினர் உடைத்துள்ளனர். இதைத் தட்டிக் கேட்டார்கள் என்பதற்காக தலித் மக்களின் வீடுகளை பொன்பரப்பி கிராமத்தில் கும்பலாகச் சென்று தாக்கியுள்ளனர். பா.ம.க.வுடன் இந்து முன்னணியினரும் இதில் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அரக்கோணம் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ‘கீழ் விஷாரம்’ வாக்குச் சாவடியைக் கைப்பற்ற பா.ம.க.வினர் உள்ளே நுழைய முயன்றபோது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி தடுத்துள்ளனர்.

அன்புமணி இராமதாஸ் போட்டியிடும் தர்மபுரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நத்தமேடு கிராமத்தில் வாக்குச்சாவடியைக் கைப்பற்றி கள்ள ஓட்டுகளை பா.ம.க.வினர் போட்டுள்ளனர். ‘இந்து’ ஆங்கில நாளேடு ஆதாரங்களுடன் செய்தியை வெளியிட்டுள்ளது. வீடியோ பதிவுகளும் வெளி வந்துள்ளன.

பா.ம.க. இளைஞரணி தலைவர் அன்புமணி இராமதாஸ் திருப்போரூரில் நடந்த கூட்டத்தில் பேசும்போது “நாம் மட்டும்தான் ‘பூத்’தில் இருக்க வேண்டும்; சொல்வது புரிகிறதா?” என்று பேசினார். மருத்துவர் இராமதாஸ், “வாக்குச்சாவடிகளில் சிங்கங்கள் மட்டுமே இருக்க வேண்டும்; குட்டிகள் இருக்கக் கூடாது” என்று பேசினார். இந்த ஆணைகளைத் தொண்டர்கள் நிறைவேற்றிக் காட்டியுள்ளனர்.

தேர்தல் களத்தில் ஜாதிவெறியைத் தூண்டிவிட்டு தலித் மக்கள் மீது தாக்குதலை நடத்தும் பா.ம.க.வின் இந்த சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் ஜாதி வெறி செயல்பாடுகளை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. பொன்பரப்பியில் தலித் மக்கள் வீடுகளைத் தாக்கியவர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்

# மதத்திற்காக மனிதனா? மனிதனுக்காக மதமா?

*இலங்கையில் கிறித்தவர்களைக் குறி வைத்து நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 200க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகிவிட்டன. இந்தியாவில் ‘இராம இராஜ்யம்’ அமைக்கத் துடிக்கும் சக்திகள், சிந்தனையாளர்களைக் கொலை செய்து வருகின்றன. இந்தப் பின்னணியில் மதம் குறித்து 78 ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் நிகழ்த்திய உரை இது.*

அக்கிரசானர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

பொதுவாக சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவைகள் எல்லாம் நல்ல அர்த்தத்தில் எடுத்துக் கொண்டாலும் அவை மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டவையாகும்.

மனித வாழ்க்கைக் கேற்ற திட்டங்களே தான் சமயம் அல்லது மார்க்கம் என்று சொல்லப் படுவதுமாகும்.

ஒரு வாசக சாலையிலேயோ, உல்லாசக் கூட்ட சாலையிலேயோ, ஒரு சங்கத்திலேயோ சேர்ந்திருக்க வேண்டிய அங்கத்தினர்கள் அச்சங்கத்தின் நிர்வாகத்தின் அவசியத்திற்காக என்று தங்களுக்குள் விதிகளை நிர்ணயித்துக் கொள்வதுபோலவே ஒரு பிராந்தியத்தில் வாழும் ஜனங்கள் தாங்கள் சேர்ந்திருப்பதற்காகவும், தங்கள் வாழ்க்கை தடையின்றி முறையாய் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடைபெறுவதற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட அல்லது யாராவது ஒரு தலைவனால் அல்லது அறிஞனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளே சமயக் கொள்கைகளாகும்.

இதுவும் அந்தந்த காலதேச வர்த்தமானத்திற்கும், மக்கள் அறிவு நிலைமைக்கும், வளர்ச்சிக்கும் தக்கபடி செய்யப்படுவதேயாகும். ஆனால், அக்கொள்கைகள் மக்கள் தங்களது நன்மை தீமைகளைக்கூட சரிவர உணர்ந்து நடந்துகொள்ள முடியாத அறிவு இல்லாத காலத்தில் மக்களைப் பயப்படுத்தி இணங்கச் செய்ய என்று பல கற்பனைகளை உண்டாக்கி பயப்படுத்தி வைத்து அப் பயத்தின் மூலமாவது நடக்கும்படி செய்யக் கருதி ஏற்படுத்திய கொள்கைக்கும் சேர்ந்ததேயாகும்.

அதாவது, எப்படி ஒரு குழந்தையானது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சக்தியில்லாததென்றும் அதைப்பற்றிய விபரங்களை எடுத்துச் சொன்னால் அதை அறிந்து கொள்ளமுடியாதென்றும் அதன் பெற்றோர்களோ, பாதுகாப்பாளர்களோ கருதினால் அக்குழந்தை வெளியில் போய் நடமாடி ஆபத்தில் பட்டுக் கஷ்டப் படாதிருக்கச் செய்ய வேறுவிதமாக அதாவது ஒரு வித பயம் உண்டாகும் படியான ‘பூச்சாண்டி’ பிடித்துக் கொள்வான் என்றும், ‘பேய்’, ‘பூதம்’ பிடித்துக் கொள்ளும் என்றும், ‘துண்டித்தக்காரன்’ பிடித்துக் கொண்டு போய் அடைத்து விடுவான் என்றும், இன்னும் பல வகையாய் சொல்லுவதோடு கையையும், முகத்தையும் ஒருவிதமாக ஆக்கிக்காட்டி அக்குழந்தைக்கு ஒன்றும் புரியாதபடி மிரட்டி பயப்படுத்தி வைத்து அதை எப்படி வெளியில் போகாமல் செய்கின்றோமோ அப்படிப் போலவே மக்கள் வாழ்க்கை நலத்திற்கென்று ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளை உணர்ந்து அதன்படி ஒழுக முடியாத நிலையில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கருதப்பட்ட காலத்தில் அப்போதுள்ள அறிஞர் என்பவர்கள் அம்மக்களை பயப்படும்படியாக ஏதோ அம்மக்களுக்குப் புரியாத ஒன்றைச் சொல்லி வேறுவித பயத்தை உண்டாக்கி அக்கொள்கைகளுக்கும், மதக் கட்டுப்பாட்டிற்கும் இணங்கி நடக்கும்படி செய்திருக்கிறார்கள்.

அந்த நிபந்தனை மிரட்டல்களும், கட்டுப்பாடுகளும்தான் இன்றைய மோட்சம், நரகம், எமன், அடுத்த ஜென்மம், கர்மம், விதி, செக்கில் போட்டு ஆட்டுவது முதலாகியவைகளாகும். மற்றும் இவற்றை வலியுறுத்தி எழுதிய சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியவைகளில் சொல்லப்பட்டவை களுமாகும்.

அது மாத்திரமல்லாமல் மேற்கண்ட முறையில் சொல்லுபவைகளெல்லாம் சொல்லிவிட்டும் எழுதிவிட்டும் ஆனபிறகு இவைகளை மனிதன் சொன்னான் மனிதன் எழுதினான் என்றால் நம்பமாட்டார்கள் என்று கருதி (ஏனெனில் அவை நம்பமுடியாததும், அறிவுக்குப் பொருந்தாததுமாய் இருப்பதால்) அவைகளையெல்லாம் கடவுள் சொன்னார். பகவான் சொன்னார், முனிவர் சொன்னார், ரிஷி சொன்னார் என்று அதாவது மனிதத் தன்மைக்கு மீறினவர்களால் சொல்லப் பட்டது என்று சொல்லி கட்டாயப்படுத்தி எப்படியெனில் நம்பினவனுக்கு மோட்சம், நம்பாதவனுக்கு நரகம், கழுதை ஜன்மமாய் பிறக்கவேண்டும் என்று சொல்லி நம்பச் செய்வ



**பெரியார்**

துமான காரியத்தின் மீதேதான் சமயக் கொள்கைகளை மக்களுக்குள் புகுத்தி இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உண்மை என்று நம்பிய பாமர ஜனங்களும், இவற்றினால் பிழைக்க வசதி செய்து கொண்ட சில பண்டித ஜனங்களும் இந்த மாதிரிக் கொள்கைகள் கொண்ட சமயங்களை முரட்டுப் பிடிவாதம், குரங்குப்பிடியாய் பிடித்து சிறிது கூட காலத்திற்கும், அறிவின் நிலைமைக்கும் ஏற்றமாதிரி திருத்துவதற்கு விடாமல் முட்டுக்கட்டை போட்டு வந்ததாலேயே அறிவுக்குத் தகுந்தபடியும் காலத்திற்கு ஏற்றபடியும் பலபல சமயங்கள் தோன்ற வேண்டியதாயிற்று. அன்றியும் திருந்த இடம் கொடுத்துக்கொண்டு வந்த சமயமெல்லாம் பெருக வும், பிடிவாதமாய் இருந்ததெல்லாம் கருகவுமாய் இருந்து கொண்டு வரவேண்டியது மாயிற்று.

ஆகவே, இன்றைய தினமும் மக்கள் எந்தச் சமயமானலும் இந்த தத்துவத்தின் மேல் ஏற்பட்டதென்பதையும் ஒத்துக் கொண்டு கால தேசவர்த்தமானத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தகுந்தபடி திருத்தமடைய உரிமையும் சௌகரியமு முடையது என்று சொல்லப்படுவதாயின் அது எந்த மதமாயினும் சமயமாயினும் (கொள்கையாயினும்) அறிவுள்ள மனிதன் ஒப்புக்கொள்ள வேண்டியதே யாகும்.

அப்படிக்கில்லாமல், அதாவது மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல் அதுவும் காலத்திற்கும், அறிவுக்கும் ஏற்ற மாறுதலுக்குக் கட்டுப்பட்டது என்பதாக இல்லாமல் மதத்திற்காக மனிதன் ஏற்பட்டான் என்றும், அந்த மதத்தைக் காப்பாற்ற வேண்டியதே மனிதனின் கடமையென்றும், அது எப்படிப் பட்டதானாலும் அதைப்பற்றிக் குற்றம் சொல்லவோ திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றும் சொல்லும் படியான மதம் எதுவாய் இருந்தாலும் அதை அழித்துத் தீரவேண்டியது மனித சமுக சீர்திருத்தத்தைக் கோருகிற ஒவ்வொருவருடையவும் முக்கியமான கடமையாகும். ஆகவே, அக்கடமைக்கு கட்டுப்பட்டவைகள்தான் சமயக் கொள்கைகளாகும்.

**(சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவு, ‘குடிஅரசு’ 25.1.1931)**

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததே யாகும். மனித வர்க்கம் விலங்குகளைப் போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்து வந்த நிலைமை மாறி, குடிசைகட்டிக் கூடிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகி விட்டன. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கின்ற அவசியம் ஏற்பட்டு விடுகின்றதோ அதே போல், மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள் தாம் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கின்றன.

ஆனால், இக்கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்கொண்டு என்று பார்ப்போமானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை - அதாவது, பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் முதலாகிய நிலையில், அதாவது கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேசவர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால் யாராவது அறிஞர் அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது, பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய்த் தங்கள் பிடிவாதம் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில், பிரிந்து போய்க் கொள்கைகள் வகுத்து, அதாவது முன்னையதைத் திருத்தியோ அல்லது சிலவற்றை மாற்றியோ அல்லது சில புதியவைகளைச் சேர்த்தோ செய்ய நேரிடும்போது - அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள், அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், ‘என் மதம் பெரிது’, ‘உன் மதம் சிறிது’ என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டுவிடுகின்றது.

இன்றையதினம் எந்த மதக்காரனையாவது கண்டு, உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? - என்றால் சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம், அதாவது எந்தக் கருத்தைக்கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அந்தக் கருத்து சற்றும் அறிந்திருக்கமாட்டான். அதோடு, அதற்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் ஏற்பட்டு விட்டன. அன்றியும், சிலர் இவற்றை தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவும் கருவியாய் விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக்கொடுமைப் படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றி, பொதுவாக மனித வர்க்கத்திற்கு அவற்றால் எவ்விதப் பலனும் இல்லாமற்போய்விட்டது.

**(குடிஅரசு - தலையங்கம் - 11-8-1929: 23-4-1949)**

## துப்புரவுப் பணியாளர் பாதுகாப்பு : மயிலை கழகத் தோழர்கள் நடவடிக்கை

02.04.2019 அன்றுகாலை மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தில் மக்கள் குடியிருப்பு பகுதியில்.... துப்புரவு பணியாளர்கள் சாக்கடை அடைப்பு, குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலையில் எந்த ஒரு பாதுகாப்பு கருவிகளும் இன்றி வேலையில் ஈடுபட்டிருந்தனர். இதை அறிந்த திராவிடர் விடுதலைக் கழகத்தை சார்ந்த மயிலாப்பூர் பகுதியின் இளைஞர்கள் பீரவீன்குமார் மற்றும் உதயகுமார் ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்த துப்புரவுப் பணியாளர்களைப் பாதுகாப்புக் கருவியின்றி வேலை செய்யக் கூடாது என்று தடுத்து நிறுத்தினர்.

அதைத் தொடர்ந்து பணியாளர்களை இந்த பணியில் ஈடுபடுத்திய வார்டு 123ஆவது பகுதி மாநகராட்சி பொறுப்பாளர் பலராமனைச் சந்தித்து முறையிட்டுள்ளனர். பாதுகாப்புக் கருவிகளை உடனே தருமாறும், அதன் பின்னே அவர்கள் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். ஆனால், பலராமன்முன்னுக்கு பின்னான பதில்களைத் தோழர்களிடம் கூறியுள்ளார். துப்புரவுப் பணியாளர்களைத் தொடர்ந்து பணியில் பாதுகாப்பு கருவிகளிலின்றி ஈடுபட அனுமதிக்க முடியாது எனக் கூறி, கழக மயிலாப்பூர் பகுதித் தலைவர் மாரி மற்றும் தோழர்கள் சென்னை மாநகராட்சியில் இந்த சம்பவம் தொடர்பாக புகார் மனு அளித்துள்ளனர்.

## சங்கர் மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

சங்கர் சமூகநீதி அறக்கட்டளை சார்பில் சங்கர் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் பொதுக் கூட்டம் 13.3.2019 அன்று உடுமலைப்பேட்டை குமரலிங்கம் பேருந்து நிலையம் அருகில் மாலை 5 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில், ‘தந்தை பெரியார் வழியில் சமூகநீதி’ என்ற தலைப்பில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், ‘பெண் விடுதலைத் தளத்தில் சமூகநீதி’ தலைப்பில் தமுஎச மாநிலத் துணைச் செயலாளர் சுந்தரவள்ளி, ‘அண்ணல் அம்பேத்கர் ஒளியில் சமூகநீதி’ தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘தமிழ்த் தேசிய மரபில் சமூகநீதி’ தலைப்பில் தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தோழர் வே. பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாலை 4 மணிக்கு சங்கர் தனிப் பயிற்சி மய்யக் கட்டிட திறப்பு விழா நடைபெற்றது.


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

# பாடத் திட்டத்தில் மத நஞ்சைக் கலந்த மோடி ஆட்சி

மோடி ஆட்சியில் பாடத் திட்டத்தில் இந்துத்துவா திணிப்பு – காஷ்மீர் மக்கள் மீதான அடக்குமுறைகள் – வங்கிப் பண பரிமாற்றத்தில் நிகழ்ந்த மோசடிகள் பற்றிய ஒரு தொகுப்பு:

**மோடியின் ஐந்தாண்டுகளில் பள்ளிக் கல்வி :** 2014இல் மோடியின் தேர்தல் அறிக்கையில், மாணவர்களுக்கு புதிய கல்வித் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அதன்படி 2016ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டு 230 பக்க வரைவு தயார் செய்யப்பட்டது. பிறகு அதையும் மாற்றியமைத்து சுப்ரமணியம் என்பவர் தலைமையின் கீழ் ஒரு புதிய குழு தொடங்கப்பட்டு வரைவு தயாரிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அதுவும் இன்று வரை முடியவில்லை.

இந்தியாவில் 2009ஆம் ஆண்டு கல்விக்கான மசோதா நிறைவேற்றப்பட்டது. இதில் 1 முதல் 8ஆம் வகுப்பு சர்வ சிக்சா அபியான் திட்டத்தின் கீழும், 9 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகள் அனைத்தும் இராஷ்ட்ரிய மத்யமிக் சிக்சா பையன் திட்டத்தின் கீழும் தனித்தனியாக பட்ஜெட் ஒதுக்கப்பட்டது. ஆனால், மோடி அரசுஇந்த இரண்டு திட்டத்தையும் இணைத்து சமக்ரா சிக்சா அபியான் என்ற திட்டத்தின் கீழ் அனைத்தையும் கொண்டு வந்தது. அதனால், ஒரே பட்ஜெட்டாக வெளியானது. இதன் காரணமாக கல்விக்கு ஒதுக்கப்படும் பட்ஜெட் மிகக் குறைவாக மாறியது.

கடந்த பத்தாண்டுகளில் 2018-19ஆம் ஆண்டில் கல்விக்கு ஒதுக்கப்பட்ட பட்ஜெட் தான் மிக குறைவானது. வெறும் 3.5சதவீதம் தான் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் அதிகாரத்தைக் கொண்டு மாநிலத்தில் பின்பற்றி வந்த கல்விக் கொள்கை யிலும் தலையீடு செய்தது மோடி அரசு. அதனால் பெரும் பிரச்சினைகள் உருவானது. மோடி அரசின் இந்த தலையீட்டால் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்பட்ட கல்விப் பட்டியல் மாநில அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படும் என்ற குரல் ஓங்கியிருக்கிறது. தமிழகத்தில் இது தேர்தல் அறிக்கையாகவும் கூட மாற்றப்பட்டிருக்கிறது. மோடி அரசு கொண்டு வந்த ஆதார் திட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். பள்ளிக்கூடங்கள் மாணவர்களின் ஆதாரை ஆவணங்களில் இணைக்க வேண்டும் என்ற கட்டாய உத்தரவினால் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் இருந்து மாணவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

மருத்துவத் துறையில் நீட் கட்டாயமாக்கப் பட்டதால் தமிழகம் இந்நாள் வரை பெற்று வந்த வளர்ச்சியையே இழக்கும் நிலை ஏற்பட்டது. அனிதா போன்ற மாணவிகளின் எதிர்காலமும் பறி போனது.

**கல்வி நிலையங்களிலும் நூல்களிலும் இந்துத்துவா பரப்புரை:** டெல்லியில் உள்ள குரு கோபிந்த் இந்திரபிரஸ்தா பல்கலைக்கழகத்தில் மூன்றாம் செமஸ்டர் சட்டப் படிப்பில் இப்படி ஒரு கேள்வி.

அஹ்மத் ஒரு முஸ்லிம்; இந்துக்களான ரோஹித், துசார், மனவ் மற்றும் ராகுல் இருக்கும் போதே சந்தையில் மாட்டை வெட்டிக் கொல் கின்றான். இப்போது அஹ்மத் செய்தது குற்றமா?

இதற்கான தொடக்கம் பா.ஜ.க. ஆட்சி யமைக்கும்போதே தொடங்கப்பட்டது. இந்தியாவில் பாட திட்டங்களை வடிவமைக் கும் குழு தொடங்கி எல்லாவற்றையும் இந்துத் வாவின் பக்கம் நிறுத்தியிருக்கிறது பா.ஜ.க.

2013இல் ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு, பாட புத்தகங்களை திருத்தம் செய்யும் குழுவை மாற்றியமைத்தார்கள். இதனைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் ஒருவர் கூறும்போது, “சென்ற முறை அமைத்த குழுவில் சில சங் உறுப்பினர்கள் யதார்த்தமாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இம்முறை தேர்ந்தெடுக்கப்படும் குழு உறுப்பினர்கள் அனைவருமே சங் அமைப்பைச் சார்ந்தவராகத் தான் இருப்பார்கள்.

இராஜஸ்தானில் 2016க்கு முன் மூன்றாம் வகுப்பு புத்தகத்தில் இருந்த ஒரு கதை.



“அஜ்மீர் நகரத்தின் சிறப்பை இரு மாணவர்கள் சுற்றிப் பார்க்கிறார்கள். குருமீத் கூட்டம் நிறைந்த இரயிலில் ஏறி அஜ்மீர் வருகிறான். அவனது நண்பன் ரஜாக் அவனை அழைத்துக் கொண்டு மொய்னுதீன் சிஸ்தி தர்கா விற்கு செல்கிறான். தர்காவில் வருடா வருடம் நடக்கும் உர்ஸ் விழாவைப் பற்றி குர்மீதிற்கு சொல்கிறான். அடுத்ததாக தாராகர் கோட்டைக்கு செல்கிறார்கள். அங்கே இராஜபுத்திர அரசர் பிரத்விராஜ் சௌகான் நினைவு சின்னத்தை பார்க்கிறார்கள். அனா சாகார் ஏரிக்கு வரும்போது சோர்வடைந்து வேறு எங்கும் செல்லாமல் திரும்பு கிறார்கள்.”

தற்போது புதிய பாடத் திட்டத்தில், மூன்றாம் வகுப்புப் பாடத்தில் வரும் அதே கதையில்:

“அதிலும் குருமீத் நெரிசல் மிகுந்த இரயிலில் வந்து அஜ்மீர் நகரில் இறங்குகிறான். இருவரும் அந்த தர்காவிற்கு செல்கிறார்கள். ஆனால் உர்ஸ் விழாவைப் பற்றி பெரிதாக எதுவும் இல்லை. தர்காவிற்கு அடுத்ததாக தாராகர் கோட்டைக்குச் செல்கிறார்கள். அங்கு, இந்த பாரத நாட்டை ஊடுருவ முயன்று முகம்மது கோரி என்ற முஸ்லிம் மன்னனை தோற்கடித்த இராஜபுத்திர அரசன் பிரத்விராஜ் சௌகானின் நினைவு சின்னத்தைச் சுற்றிப் பார்க்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, இந்து மத யாத்திரைத் தளமான புஷ்கர் நகருக்குச் செல்கிறார்கள். அங்கே ரஜாக், குருமீத்திற்கு பிரபலமான பிரம்மா கோயிலையும், மகாபாரத வீரர்களான பாண்டவர்களால் கட்டப்பட்ட ஐந்து நீர்த் தேக்கங்களையும் சுற்றிப் பார்த்தார்கள்” என்று முடிகிறது கதை.

இந்த புதிய பாடத் திட்டத்தின் நோக்கம், படிக்கும் மாணவர்கள் முழுக்க இந்து கலாச் சாரங்களை மட்டுமே படிப்பவர்களாகவும் இங்கே இருக்கும் முஸ்லிம்கள் அனைவரும் இந்துத்துவாவிற்கு பணிந்து வாழ்பவர்களாக வுமே வாழ்ந்திட வேண்டும். அப்படி இல்லாதவர்கள் இந்தியாவைக் கொள்ளை யடித்த முஸ்லிம் மன்னர்களின் வாரிசுகள் என எல்லோராலும் பார்க்கப்பட வேண்டும் என்பதே.

இந்த புதுப்பித்த பாடத் திட்டத்தில் மாற்றப்பட்ட அம்சங்களில் சில:

கணவன் இறந்தால் மனைவி தீயில் இறங்கி உயிரை விடும் சதி போன்ற நடவடிக்கைகள் அரசு நிகழ்த்தும் ஒழுங்கு விதிமுறைகள் போலானது என்று கூறப்பட்டிருக்கிறது.

பாட புத்தகங்களின் ஒவ்வொரு பகுதியும் தேசியவாதத்தைப் பேசுவதாகவும், இராணுவ வீரர்களிடம் கேள்வி கேட்பது மரியாதை குறைவானது என்றும் பேசுகிறது.

6ஆம் வகுப்புப் பாடத்திலுள்ள ஒரு கதை, தடை செய்யப்பட்ட சதி பழக்கம் சரியானது என்ற போர்வையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கதையில்,

“சிறிய பகுதியை ஆட்சி செய்த அரசன் சுராவத். டெல்லியில் இருந்து படையெடுத்து வரும் பாதுஷாவை எதிர்க்கப் போகும்போது ராணி அவரைத் தடுத்து, சதியின் பெருமையைப் பற்றி சொல்கிறார். அதனால் தன் தலையை அறுத்து அந்த இரத்தத்தின் மூலம் கோயிலை சுத்தம் செய்கிறார் ராணி. பிறகு அரசன் ராணியின் முடியை மாலையாகக் கழுத்தில் சுற்றி ராணியின் தலையை பதக்கமாக அணிந்து கொண்டு போருக்குப் போகிறார்.

இப்படியான கதைகளைப் பாடத்தில் சேர்ப்பதன் மூலம் தங்களது சனாதன தர்மத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஒரு தலைமுறையை உருவாக்கும் மாணவர்களைப் பழக்க நினைக்கிறார்கள்.

4ஆம் வகுப்பு பாடத் திட்டத்தில் ஆண்கள் அனைவரும் விளையாட்டுகளில் ஈடுபடுபவர் களாகவும், பெண்கள் குடங்களில் தண்ணீர் நிரப்புபவர் களாகவும், சமைப்பவர்களாகவும் சித்திரங்களின் மூலம் காட்டப்பட்டிருக்கிறது. முதலாம் வகுப்புப் பாடத்திலேயே, மொழியின் எழுத்துக்களை சொல்லித் தர வேண்டிய இடங்களில் இந்து மத அடையாளங்களைக் கொண்ட வார்த்தைகள் மட்டுமே கையாளப் பட்டுள்ளது.

ஐந்தாம் வகுப்பு பாடத் திட்டத்தில், பசு என்ற வார்த்தைக்கான அர்த்தத்தைக் கூறும்போது, ஞானம், வலிமை, உடல்நலம், மகிழ்ச்சி மற்றும் வளமை என்பதை குறிப்பதாகவும் அதனால் குழந்தைகள் பசுவுக்கு சேவை செய்யவும், பாதுகாக்கவும் வேண்டும் என குறிப்பிடப்பட் டிருக்கிறது.

எட்டாம் வகுப்பு பாடத் திட்டத்தில், “பசு பாதுகாப்பில் கிராம முன்னேற்றம்” எனும் தலைப்பில் பாடமே இடம் பெற்றுள்ளது. அந்த புத்தகத்திலேயே முதல் துணை பிரதமராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் சோம்நாத் கோயிலை திரும்பக் கட்டமைத்ததில் உள்ள மிகப் பெரும் பங்களிப்பைப் பற்றி விரிவாகக் கூறுகிறது.

அதைப் போல் 3, 4, 5ஆம் வகுப்பு சுற்றுச் சூழல் அறிவியல் பாடத்தில் நமது நாட்டின் பெருமை என்று 15 தலைவர்கள் படங்கள் இடம் பெற்றிருக்கிறது. இதில் ஒருவர்கூட முஸ்லிம் இல்லை.

6ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாட புத்தகம், சாதி அமைப்பின் வரலாற்றை மூடி மறைக்கும் விதமாக ஒரு பாடத்தைக் கொண்டிருக்கிறது. அதில், “தொடக்கத் தில் சாதி அமைப்பானது மிக சிறப்பானதாக இருந்தது. சாதி, அவரவர் தொழில்களை சார்ந்ததே தவிர பிறப்புடன் சம்பந்தப்பட்டதல்ல. சாதிகளுக்கு இடையில் குடிநீர், உணவு பகிர்ந்து கொள்ள திருமண உறவை வைத்துக் கொள்ள எந்தத் தடையும் இல்லை. அதனால் தீண்டாமைக்கு இங்கு இடம் இல்லை” என்றும் கூறுகிறது.

3ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை உள்ள பாடப் புத்தகங்களின் தொடக்கத் திலேயே, தேச பக்தி என்ற பாடம் அல்லது பாடலைக் கொண்டதாகத் தான் அமைந்திருக் கிறது.

7ஆம் வகுப்பில் உள்ள ஆங்கில பாடப் புத்தகத்தில் புதிய தொழிற்நுட்பங்கள் கொண்ட தொலைத் தொடர்பு பற்றி கூறும்போது நரேந்திர மோடியின் வானொலி நிகழ்ச்சியான மன் கி பாத் இடம் பெற்றுள்ளது.

4ஆம் வகுப்பில் உள்ள சுற்றுச்சூழல் அறிவியல் புத்தகத்தில் இந்திய அரசின், கங்கா திட்டமானது மிக சிறப்பானது. இதன் மூலம் கங்கை மீண்டும் நிரந்தரமாக சுத்தப்படுத்தப் படும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. (ஆனால் கங்கை மோடி அரசின் கீழ் தான் மிக அசுத்தமான நிலைக்கு சென்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது)

புதுப்பிக்கப்பட்ட புத்தகங்களின் அனைத்து பகுதிகளிலும், இந்துக்களை மட்டும் முதன்மைப் படுத்தும் கருத்துகளும் பா.ஜ.க.வின் ஆட்சி சிறப்புகள் என்ற பெயரில் அரசின் திட்டங்கள் பற்றியும் ஆங்காங்கே கூறப்பட்டிருக்கிறது. (ஆதாரம் : ஸ்க்ரால், 14.11.18)

மோடி பொறுப்பேற்றப் பிறகு “இந்திய வரலாற்று ஆராய்ச்சி சபை” நிறுவனத்தின் தலைவராக சுதர்சன் ராவ் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினுடைய மிகப் பெரும் அனுதாபி. இவர் பொறுப்பேற்ற பிறகு ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்த மூன்று பேரை இந்த கவுன்சிலுக்குள் பணியமர்த்தினார்.

இந்தியாவின் கல்விக் கொள்கையை உருவாக்குவதில் மிகப் பெரும் பங்கு இந்த கவுன்சிலுக்கு இருக்கிறது. இதில் ஆர்.எஸ்.எஸ். தலையீடு ஏற்பட்ட பின்பு, மகாபாரதம், இராமாயணத்தை ஆய்வு செய்து புத்தகங்களில் வரலாற்றுப் பாடமாக்க வேண்டும் என கூறி வருகிறார்கள். (ஃபேர்ஸ்ட்போஸ்ட், ஜனவரி 2015)

மோடி அரசின் உதவியுடன் சங்பரிவார அமைப்புகள் கல்வி பாடப் புத்தகங்களில் வரலாற்றைத் திரித்து தங்களைக் கதாநாயகனாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். இதற்காக, கல்வி நிலையங்களையும், நாட்டின் கல்வி அமைப்பை யும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## 13 உயிரைப் பலி வாங்கிய தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு

# சவப் பரிசோதனை அறிக்கை தரும் அதிர்ச்சி தகவல்கள்

*தூத்துக்குடி துப்பாக்கி சூடு பற்றிய சவப் பரிசோதனை அறிக்கையை தமிழக அரசு வெளியிடாத நிலையில் 'பிரண்ட் லைன்' இதழ் அதை வெளிக் கொண்டு வந்துள்ளது. அந்த அறிக்கையை அலசி மருத்துவர் புகழேந்தி 'ஜூனியர் விகடன்' இதழில் எழுதிய கட்டுரை இது.*

தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராடிய மக்கள்மீது காவல்துறை நடத்திய துப்பாக்கிச்சூடு மறக்கமுடியா பெருந் துயரம்! துள்ளத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்ட 13 பேர்களின் உடற் கூராய்வு சமீபத்தில் வெளியானது. இந்த அறிக்கைகளை ஆராய்ந்து, பல்வேறு சந்தேகங்களை எழுப்பி யுள்ளார் தடயவியல்துறை மருத்து வரான புகழேந்தி.

அவரிடம் பேசுகையில், "சுட்டுக் கொல்லப்பட்ட ஸ்னோலின், கந்தையா, தமிழரசன், செல்வசேகர் ஆகியோரின் உடல்களுக்கு 2018ஆம் ஆண்டு மே மாதம் 24, 25ஆம் தேதிகளில் நடைபெற்ற பிரேதப் பரிசோதனை ஆய்வு மற்றும் அறிக்கைகள் அவசரக் கோலத்தில் நடந்துள்ளன என்பதை உடற்கூராய்வு அறிக்கைகளை வைத்தே சொல்ல முடியும். போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் 151-ன்படி இறந்தவர்கள் அணிந் திருந்த உடை, குண்டு பாய்ந்த இடத் தின் அருகிலிருந்து எடுக்கப்பட்ட தோல் மாதிரிகள் போன்றவை பாது காக்கப்பட வேண்டும். மேலே குறிப் பிடப்பட்ட நான்கு பேரின் உடற் கூராய்வின்போது இவை கடைப் பிடிக்கப்படவில்லை என்பதை உடற்கூராய்வு அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. ஜூன் 6, 2018 அன்று உடற் கூராய்வு செய்யப்பட்டபோது, இவை அனைத்தும் பாதுகாக்கப் பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூன் 6ஆம் தேதி நடந்த இரண்டாவது ஆய்வின்போது கூடுதலாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவர் வினோத் அசோக் சவுத்திரியும் இணைந்துள்ளார். முதல் முறை உடற்கூராய்வின்போது இந்த நடைமுறையைப் பின்பற்றாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அருகிலிருந்து சுடும்போது அப்ரேசன் காலர் (Abrasion Collar), கிரீஸ் காலர் (Grease Collar) ஆகிய தடயங்கள் குண்டு நுழைந்த இடத்தில் இருக்கும். ஆடை அணிந்திருந்தால் கிரீஸ் காலர் இல்லாமல் போகலாம் என்பது தடயவியல் உண்மை. தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு அருகிலிருந்தே நடத்தப்பட் டுள்ளது என்பதை இறந்தவர்களின் உடலில் இருக்கும் அப்ரேசன் காலர், கிரீஸ் காலர் உறுதி செய்கின்றன. சுட்டுக் கொல்லப்பட்ட 13 பேரில், 12 பேருக்குத் தலை மற்றும் நெஞ்சுப் பகுதியில்தான் குண்டு பாய்ந்துள்ளது. எட்டு பேர் பின்புறம் சுடப்பட் டுள்ளனர். அதாவது உயிரைத் தற்காத்துக்கொள்ள தப்பி ஓடும்போது சுடப்பட்டு இறந்துள்ளனர்.

சட்ட விதிகளின்படி குற்றம் நடந்த இடம் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பிரேதப் பரிசோதனை அறிக்கையை அதனோடு ஒப்பிட்டு உண்மையைச் சரிபார்த்துக் கொள்ள முடியும். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் உள்ளே, கந்தையா என்பவர் இறந்துகிடந்துள்ளார். அவரது முதுகுப் புறத்தின் வழியாகப் பாய்ந்த குண்டு, இடதுபக்க மார்பு வழியாகத் துளைத்துக்கொண்டு வெளிவந்துள்ளது என்று அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அவர் குண்டு அடிபட்டுக் கீழே விழுந்திருந்த கோணம் மற்றும் அவரது தலை - கால்கள் இருந்த திசை கோணங் களைப் பார்க்கும்போது அவரது முன்பக்க மார்பில் குண்டு துளைத்துச் சென்றதற்கு வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. அவரது வலது கை மணிக் கட்டின் பின்புறம் பாய்ந்த குண்டு எலும்பு முறிவை ஏற்படுத்தி, மறுபுறம் துளைத்து வெளி வந்துள்ள தாகத் தகவல் உள்ளது. ஆனால், அறிக்கையில் ரத்தம் வந்ததற்கான பதிவுகள் இல்லை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், 'கலவரப் பகுதியில் அடி பட்டவர்களுக்கு உடனடி மருத்துவச் சிகிச்சை அளிப் பதே காவலர்களின் முதல் கடமை என்று கூறப்பட் டுள்ளது. ஆனால், அதிலெல்லாம் காவலர்கள் அக்கறை காட்டியதற்கான ஆதாரங்களே இல்லை. இன்னும் சொல்லப் போனால், செல்வசேகர் என்பவர் குண்டு பாயாமல், காவல்துறையின ரால் அடிக்கப்பட்டே இறந்துள்ளார். அவருடைய வலது காலில் 12 செ.மீ. நீளத்துக்கு எலும்பு முறிவு ஏற்பட் டுள்ளது அறிக்கையில் பதிவாகி இருக்கிறது. எனவே, அந்த வலது கால், இடது காலைவிட நிச்சயம் அதிகமாக வீங்கியிருந்திருக்கும். மேலும் அந்த இடத்தில், ரத்தக்கசிவும் அதிகமாக இருந்திருக்கும். ஆனால், அது குறித்து உடற்கூராய்வு அறிக்கையில் எந்தத் தகவலும் இல்லை. மேலும் நெஞ்சுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால், அவரது இருதயத்தைச் சுற்றி ரத்தம் உறைந்திருந்ததாக அறிக்கையில் உள்ளது. அவரது உடலில், இடதுபக்க முதல் விலா எலும்பிலும் காவல்துறை அடித்ததால் எலும்பு முறிவு ஏற்பட் டுள்ளது. இவ்வளவு காரணங்கள் இருந்தும், 'இடது மார்புப் பகுதி தாக்கப்பட்டதால் ஏற்பட்ட ரத்தக் கசிவு மட்டுமே இறப்புக்குக் காரணம்' எனப் பதிவு செய்யப்பட்டு இருப்பது மீதி காரணங்களை மறைப்பதற்காகத் தானோ?" என்று மருத்துவர் புகழேந்தி கேட்கிறார்.

இதுகுறித்துப் பேசுவதற்காக தூத்துக்குடியில் உடற்கூராய்வு செய்த மருத்துவர் குழுவில் உள்ள மருத்துவர் களைத் தொடர்புகொண்டபோது அவர்கள் பேச மறுத்துவிட்டனர். துப்பாக்கிச்சூட்டை விசாரித்துவரும் ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான தனிநபர் கமிஷனிடம் பேசியபோது, "இறந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை இதுவரை விசாரித்துள்ளோம். மருத்துவர்கள், நீதிபதிகள் மற்றும் காவல்துறையினரை இன்னும் விசாரிக்கவில்லை. அந்த விசாரணைகள் நடைபெற்றால்தான் இந்தச் சந்தேகங்களுக்குத் தெளிவான பதிலைச் சொல்ல முடியும்" என்றனர்.

துப்பாக்கிச்சூடு சம்பவம் நிகழ்ந்து ஒரு வருடம் ஆகப்போகிறது. இன்னும் மண்ணில் சிந்திய இரத்தத்துக்கான அழுகுரல்கள் கேட்டுக் கொண்டே தான் இருக்கின்றன. ஆனால், இறந்தவர்களின் உடற்கூராய்விலேயே இவ்வளவு கேள்விகளும் தீர்க்க வேண்டிய சந்தேகங்களும் இருக் கின்றன!

## பெரியார் சிலை உடைப்பைக் கண்டித்து சங்கராபுரத்தில் ஆர்ப்பாட்டம்




கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் 10.04.2019 புதன் கிழமை மாலை 4.00க்கு புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மத வெறியர்கள் பெரியார் சிலையை உடைத்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பட்டத் திற்கு மாவட்ட துணைச் செயலாளர் மு. நாகராஜ் தலைமையேற்றார். அதில் பெரியார் சிலை உடைப்பைக் கண்டித்தும், பார்ப்பன மதவாதத்தைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. தோழர்கள் சி. சாமிதுரை, பெரியார் வெங்கட், கல்லை சங்கர், செ.வே ராஜேஷ், பெரியார் பாரதி, கார்மேகம், ஜெ.க. வேலாயுதம், துளசி உள்ளிட்ட 30 மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## குமரி மாவட்டக் கழகம் நடத்திய அம்பேத்கர் கருத்தரங்கு

திராவிடர் விடுதலைக் கழகம், குமரி மேற்கு மாவட்டம் நடத்திய புரட்சியாளர் அம்பேத்கர் 128ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம் 14.04.2019 ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00மணிக்கு அமைப்பாளர் தமிழ் அரசன் தலைமையுரையுடன் துவங்கியது. அனீஸ் வரவேற்புரையாற்றினார். விஸ்ணு 'சாதியால் அம்பேத்கர் சந்தித்த பாதிப்புகள்' என்ற தலைப்பிலும், முனைவர் டி.மத்தியாஸ், 'அம்பேத்கரின் இன்றையத் தேவை' என்ற தலைப்பிலும், தமிழ்மதி 'அம்பேத்கரை விழுங்கும் இந்துத்துவா' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள். பின்பு கேள்வி பதில் நிகழ்வுகள் நடைப்பெற்றது. மஞ்சுகுமார் நன்றி கூறினார். கூட்டத்தில் தோழர்கள் ரமேஸ்பாபு, இராஜேஸ்குமார், சஜிகுமார், முத்து, இரவி, சங்கர், இராஜேந்திரபிரசாத் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

## தூத்துக்குடியில் அம்பேத்கர் சிலைக்கு கழகம் மாலை அணிவிப்பு

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் எதிரிலுள்ள அண்ணலின் சிலைக்கு தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்க முழக்கம் எழுப்பப்பட்டது.

## கட்டமைப்பு நிதி : கடலூர் மாவட்டம் தீவிரம்

06.04.2019 அன்று கடலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் கருவேப்பிலங்குறிச்சி அறிவழகன் வீட்டில் தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் தலைமையில் நடைபெற்றது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. கழகத்தின் கட்டமைப்பு நிதியாய் ரூபாய் 20000 மே மாதம் 10-ந் தேதிக்குள் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது
2. வருகின்ற 17ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தலைமைக் கழகத்தின் முடிவான திமுக கூட்டணியை ஆதரிப்பது என்பதை ஆதரித்து கடலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு பாராளுமன்ற தொகுதிகளில் சிதம்பரம் கடலூர் திமுக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அவர்களோடு சேர்ந்து பிரச்சாரம் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது
3. மே மாதம் கடலூர் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்திற்கு விழுப்புரம் மாவட்டத் தலைவர் இளையரசன் மற்றும் விழுப்புரம் மாவட்டம் பெரியார் சாக்ரடீஸ் ஆகியோர் கூட்டத்திற்கு வந்து சிறப்பித்தனர். நட பாரதிதாசன் (மாவட்டத் தலைவர்) நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th April 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN